# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் 10




## நாவலர் எழுந்தார்

**K.Nadarajah**
Tamil Trd, BA, MA,
PGDE, PGDSNE, MED
Teacher,
Cambridge College,
Kotagala

# பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை 1899-1986

- பிறந்த ஊர் - மட்டுவில் தனங்கிளப்பு
- தொழில் - திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்.
- ஈழத்து இரசனைமுறைத் திறனாய்வில் முக்கியமானவர்.
- எழுதிய நூல்கள் -
  இலக்கியவழி, கம்பராமாயணக் காட்சிகள்,கந்தபுராணம் தஷ்ணகாண்டவுரை.



- கூட்டம் நடைபெற்றஆண்டு.

  1878
- கூட்டம் நடைபெற்ற இடம்

  வண்ணார்ப்பண்ணை சைவபிரகாச வித்தியாசாலை
- கூட்டமண்டப அமைவிடம்

  இப்பொழுது நாவலர் வித்தியாசாலை வண்ணார் பண்ணைச் சந்திக்கு வட கிழக்குக் கோணத்தில் இருக்கிறது. அந்தகாலத்தில் அது மேற்படி சந்திக்கு தென்மேற்குக் கோணத்தில் இருந்தது.

- கூட்டத்திற்கு வருகைத் தந்தவர்கள்

  கல்விமான்கள், பிரபுக்கள், பிராமண சைவக் குருமார்கள், உபாத்தியாயர்கள், இன்னும் பல்வேறு பிரபல்யமானவர்கள், சட்டநிபுணர்களான வழக்கறிஞர்கள்

- கூட்டத்திற்கு தலைமைவகிக்க வேண்டியவர்

  ஆறுமுகநாவலர்

- நாவலருக்கு வந்த வருத்தம்.

  காசம்

- மண்டபத்தில் நாவலரின் இறுப்பு

  மண்டபத்தில் ஒருபக்கத்தில் ஒரு தூணுக்கு அருகிலே திண்டுத் தலையணை ஒன்றில் அடிக்கடி சாய்ந்துகொண்டும், மடியிலும் பக்கங்களிலும் அடுக்கிய தலையணைகளில் முழங்கைகளை ஊன்றி உள்ளங்கைகளினால் நெற்றிகளைத் தாங்கிக் கொண்டு கூட்ட நடைமுறைகளை அவதானித்தபடி இருக்கின்றார்.

- நோய் அறிகுறிகள்.

  மூச்சுவிடமுடியாது, பேசவியலாது, வயிற்றை கொய்துவரும் பொல்லாத வருத்தம்.

- சென்னை சர்வகலாசாலையார் நடத்திய பீ.ஏ பரீட்சையில் முதன் முதலில் சித்தியடைந்தவர்கள்.

  வை.விசுவநாதபிள்ளை,
  சி.வை.தாமோதரம்பிள்ளை,

- விசுவநாதபிள்ளை

  மகாவிவேகி; கணிதமேதை; தாமோதரம்பிள்ளைக்கு ஆசிரியர்; வாதஞ்செய்வதில் பெரிய சாமர்த்தியவான். நாவலர் அவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் மூத்தவர்.

- கூட்டத்திற்கு தலைமை வகிப்பவர்

  வை.விசுவநாதபிள்ளை

- சேர்.பொன்.இராமனாதன்

  இருபத்தைந்துவயது, சிரித்தமுகம்; தங்கசொரூபம்; அப்பொழுதுதான் சென்னைப் பட்டணத்திலிருந்து படித்துவிட்டு வந்தவர்.
- பிறிற்றோ

  பிரசித்திபெற்றவழக்கறிஞர். சட்டநிபுணர்களுக்குள்ளே தலைசிறந்தவர். எல்லோரும் அவரைஅறிவர். கொழும்பு, யாழ்ப்பாணத்தில் பெரியபேர் உண்டு. பாரியவழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம்.
- வாதம் நடைபெறுவதன் நோக்கம்

  இலங்கை சட்டசபைக்கு பிரதிநிதியை தெரிவுசெய்வதற்கு.

- கூட்டத்திற்குவழங்கப்பட்டபெயர்

  வாதமகாசபை

- வாதத்தின் உச்சகட்டம் சித்தரிக்கப்படும் விதம்

  வாத பிரதிவாத மின்னல்கள், முழக்கங்கள் நடக்கின்றன. கைவேல் எறிகிற வேல்- இறகுள்ளஅம்பு - இல்லாத அம்பு- வாள்- சக்கரம் - இவற்றிற்கு மேலே தெய்வப் படைகளிலுங் கைவைகின்ற சமயம்;

- பிறிற்றோ கட்சியினரின் திறமை

  பிரபல வழக்கறிஞர்கள், வாதமில்லா இடத்திலும் வாதம் வருவிக்கக் கூடியவர்கள்.

பின்வரும் பாடலுக்கு பொருள்

பொழிந்தநெய் யாகுதிவாய் வழிபொங்கி
எழுந்த கொழுங்கனலென்ன எழுந்தார்
மாகமடங்கலும் மால்விடையும்பொன்
னுடகமும் நாணநடந்தார்

பொருள்

யாகம் வளர்க்கின்ற பகுதியில் வாயில் நெய்யை பெய்தால் (ஊற்றினால்) அதில் எரிந்துவருகின்ற தீயைப் போல் நாவலர் அவர்கள் மிக ஆவேசமாக எழந்தார்கள். அதாவது ஆண்சிங்கமும், இடபமும், பொன்மலையாகியமேருவும், யானையும் நாணும்படியாக நடந்தார்.

குறிப்பு

மிதிலை நகரில் மிகப்பெரிய சபைதனில் யாரும் எதிர்ப்பார்க்காத சமயத்தில் இராமன் வில்லை நோக்கி நடந்து சென்றார். அதைப்போலவே நாவலர் அவர்கள் விவாத மண்டபத்தை நோக்கி நடந்து சென்றார் எனகட்டுரைஆசிரியர் அழகுற எடுத்துக் கூறுகின்றார்.

நாவலர் அவர்களின் நிலை

கம்பீரமானதோற்றம் - வீறுகொண்டபார்வை – எண்ணங்களின் வேகம் - இவற்றை வர்ணிக்க ஒரு கம்பர் இல்லை.

- நாவலர் அவர்கள் அச்சந்தர்ப்பத்திலே கூறிய வார்த்தை

  ‘அதுகிடக்க எடுத்துக்கொண்டு வா தந்தி தபாற் கட்டுக்களை’ என்றார்.

- பிரசண்டமாருதத்திற்கு பிறகு சபையில் நடந்தது

  பேச்சு மூச்சு ஒன்றும் இல்லை. மேலே கிளம்பின பிறிற்றோ கட்சியினர் மெல்ல மெல்ல கீழே இறங்கி தரை மட்டதிற்கு வந்துவிட்டார்கள்.

- நாவலர் அவர்களுடைய ஆளுமை

  ஒருவர் ஒருவராகவோ இருவர் இருவராகவோ அன்றி பலர் கூட்டம் கூட்டமாகவோ வாததிற்கு வரலாம்.

- கோயிலாருக்கு ஏற்பாட்டளாராக இருந்தவர்
  பிறிற்றோ
- பிராமணருக்கு ஆதரவாக இருந்தவர்
  நாவலர்
- பிற்றோவின் நேர்மையற்ற குணங்கள்

நாவலர் அவர்கள் தமக்கு சார்பாய் இருந்தால் தாம் பிராமணர்களுக்கு வெற்றி கிடைக்கத்தக்க வகையில் வழக்கை நடத்திவைப்பார் என்று தமது அந்தரங்க நண்பர்கள் மூலம் நாவலர் அவர்களுக்கு தெரிவித்து தாமே நேரிற் சிலகடிதங்களில் - தந்திகளில் -ஒருவாறு குறிப்பிட்டும் இருந்தார் போலும். இதுபிறிற்றோவின் நேர்மையற்ற செயலாகும்.

- **பிற்றோவின் நேர்மையற்ற செயல் நாவலருக்கு ஏற்படுத்திய தாக்கம்**

  நாவலரின் இருதயத்திற் பெரு நெருப்பை கொளுத்திவிட்டது.

- **நாவலரின் வருகைக்கு பின் சபையின் நிலை**

  வாதத்திற்கென்று வந்திருந்தவர்கள் இருந்தேவிட்டார்கள். எழுந்தவர்கள் வேறு வியாசம் பண்ணிக்கொண்டு வெளியில் போய்விட்டார்கள். போனவர்கள் பின் உள்ளே வரவில்லை. தப்பித்துக்கொள்ள வழிவகைகளின்றித் தம்மை அறியாமலே வாய்க்கழறி அகப்பட்டுக் கொண்டவர்கள் தமது உடல் நடுங்க நாத்தழுதழுத்து, பிறிற்றோ தக்கவர் அல்லர் என்று தாமே சொல்லிச் சமாதானப்படுத்திக் கொண்டார்கள்.

- **நாவலரின் ஆசிர்வாதத்தால் நடந்தது**

சேர்.பொன்.இராமநாதன் துரை அன்று தொடக்கம் அரை நூற்றாண்டுக்கு மேல் இலங்கை சட்டசபையில் ஓரிலங்கை சிவப்பாயிருந்து விளங்கினார்.

- **அருணந்தி சிவாச்சாரியாரின் வருத்தமான நிலை**

அவருக்கை ஒரு வகைவயிற்றுவலி இருந்தது. அவர் அந்த வலியை மாற்றாமல் தமது பிரார்த்தம் என்று கருதி அதை அனுபவித்துக் கொண்டு வந்தார். மாணவர்களுக்குப் பாடஞ் சொல்கிறபோது மாத்திரம் அவர் தமது வலியை அங்கவஸ்த்திரத்தில் ஆவாகனம் பண்ணிபக்கத்தில் வைத்துவிட்டு பாடஞ் சொல்வது வழக்கம். அந்த வஸ்த்திரமும் அதுவரை துடிதுடித்துக் கொண்டிருக்கும். பாடஞ் சொன்ன பிறகு பழையபடி அந்த வலியை எடுத்து வயிற்றில் விட்டுவிடுவார்.

- **நாவலரின் வருத்தமும் நிலையும்**

மேலே கூறியதுபோலநாவலர் அவர்களின் காசம் எத்தனையோ வைத்தியர்களுக்கு எடுபடாமல் இருந்தது. இந்தகாசம் நாவலர் அவர்கள் ஆவேசங்கொண்டு எழுந்த வேளையில் ‘வருகிறேன் போகிறேன்’ என சொல்லாமலே பறந்துவிட்டது.